**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.88/2020

Deposition of witness for DW2

| | | |
|---|---|---|
| Name | : | சாலமோன் |
| Father's Name | : | சாமுவேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.02.2026.

<u>முதல் விசாரணை:</u>

நான் இடைகால் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்துவருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் கோரியுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

1. இடைகால் சார்பதிவாளர் அலுவலக நிலுவை ஆவண எண்.16/2025 நாள்: 25.06.2025 அசல் நீதிமன்றத்தில் ஒப்பீடு செய்யப்பட்டு சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>1 முதல் 4 வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

1. வாதிகள் தரப்பில் இருந்தும் ஆவணங்களை எடுத்து வரச் சொல்லி உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான்.

2. 05.11.2019 தேதியிட்ட 4ம் வாதி கோமகத்தார்கள் வழிபாடு அறக்கட்டளைக்கு சுப்பையா,த/பெ.A.R.S. ராமலிங்கம் வழங்கிய கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாமல் மறுப்பு தெரிவித்த Refusal Check Slip

No.58/2019 ஒப்பந்த நகல் ஆகியவைகளை கொண்டுவரப்பட்டதா என்றால் இல்லை. ஏனெனில் மேற்படி ண Check Slip இணையதளத்தில் 1 வருடம் மட்டுமே கணினியில் சேமிப்பில் இருக்கும் 1 வருடத்திற்கு மேல் இருக்காது

3. என்னிடம் காண்பிக்கப்படுவது Check Slip No.58/2019 என்றால் சரிதான். அதன் நகல் வாதி வழக்கறிஞரிடம் இருந்து உண்மை என சார்பதிவாளர் அங்கீகாரம் செய்த பின் உண்மை நகல் பெறப்பட்டு சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. கடந்த 16.04.2019ம் தேதியில் கிரைய ஆவண எண்.1528/2019 –1ம் பிரதிவாதி ராஜ் என்ற சண்முகராஜ் என்பவர் 2ம் பிரதிவாதி சந்திராவிற்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். கிரைய ஆவண எண்.1528/2019ன் சான்றிட்ட நகல் சா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கடந்த 25.06.2025ம் தேதி R. காந்திமதி அண்ணி, R.நாராயணன், R.சுப்பையா ஆகிய மூவரும் மாடசாமி என்பவருக்கு சென்னை நீலாங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த சிறப்பு அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். சிறப்பு அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. கடந்த 25.06.2025 தேதியிட்ட கிரைய நிலுவை ஆவணம். 16/2025 ஆவணத்தை வழங்கக்கோரி 4ம் வாதி 13.08.2025ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதை நான் 14.08.2025ல்

பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு நகலை எடுத்துவந்தேனா என்றால் இல்லை. வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதி வழக்கறிஞரிடம் காண்பித்து பின் சாட்சியிடம் ஒப்புதல் பெறப்பட்டு அறிவிப்பு, பதிவு தபால் அனுப்பிய ரசீது மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டையுடன் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. கடந்த 05.08.2025ம் தேதி அருணாச்சலம் என்பவர் 25.06.2025ம் தேதியிட்ட நிலுவை கிரைய ஆவணத்தை தரக்கோரி தகவல் உரிமை சட்டத்தின் கீழ் மனு அளித்துள்ளார் என்றால் சரிதான். அருணாச்சலத்தின் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய மனு சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. ஏன் வாதி தரப்பில் கோரிய சா.சா.ஆ.6 ஆவணத்தை கொண்டுவர இயலவில்லை என்றால் ஒரே கோப்பாக எங்கள் அலுவலகத்தில் உள்ளது.

9. கடந்த 11.06.2022 தேதியிட்ட ஆவண எண்.3051/2022 R. காந்திமதி அண்ணி, R.நாராயணன் ஆகிய இருவரும் R.சுப்பையாவிற்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலுடன் ஒப்பிடப்பட்ட சான்றிட்ட நகல் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. கடந்த 09.12.2021 தேதியிட்ட ஆவண எண்.4534/2021 மாரியப்பன், தங்கமாரி ஆகியோர்களுக்கு A.R.S. ராமலிங்கம் குமாரர் R. நாராயணன் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் அசலுடன் ஒப்பிடப்பட்ட சான்றிட்ட நகல் சா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. கடந்த 11.06.2021 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவண எண்.4555/2021ன் படி R.சுப்பையா அவர்களுக்கு ராமலிங்கம் மனைவி காந்திமதி அண்ணியும், ராமலிங்கம் குமாரர் நாராயணனும் எழுதிய ஆவணத்தின் அசலுடன் ஒப்பிடப்பட்ட சான்றிட்ட நகல் சா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. சா.சா.ஆ.1 எங்கள் அலுவலகத்தில் பதிவிற்கு பெறப்பட்டு சரிபார்த்து எவ்வளவு நாட்கள் எங்கள் கையில் நாங்கள் வைத்துக் கொள்ளலாம் என்றால் எங்களுக்கு காலவரையறை இல்லை. நான் தவறாகக் கூறுகின்றேன் என்றும் 30 நாட்கள் மட்டுமே எங்கள் கையில் வைத்திருக்க வேண்டும் என்றும் பதிவிற்கு முன்னிட்டால் பதிவு செய்யவேண்டும் அல்லது மாவட்ட பதிவாளருக்கு நான் ப ரிந்துரை செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் என் அலுவலகத்தில் நிலுவையில் வைத்துக் கொள்ளலாம்.

13. சா.சா.ஆ.1 பத்திர இடத்தின் சொத்தை நான் ஸ்தல பார்வையிட்டேன் என்றால் சரிதான்.

14. ஸ்தல பார்வையின் போது அனுபவம் உறுதி செய்து அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரிதான்.

15. சா.சா.ஆ.1 நிலுவையில் வைத்ததற்கு காரணம் என்ன என்றால் ஸ்தல விசாரணைக்காக வைத்திருந்தேன்.

16. சா.சா.ஆ.1ற்கு பதிவு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தும் பெறப்பட்டது என்றால் சரிதான்.

17. சா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையம் வாங்குபவரும், கிரையம் கொடுப்பவரும், சாட்சிகளும் என் முன்பு என் அலுவலகத்தில் கையொப்பமிட்டனர் என்றால் சரிதான் கிரையம் கொடுப்பவருக்காக அவரின் அதிகார முகவர் கையொப்பமிட்டார்.

18. நான் கிரையம் கொடுப்பவரின் அதிகார முகவர் என் முன்பு சமர்ப்பித்த சிறப்பு அதிகார ஆவணத்தை பரிசீலனைக்கு உட்படுத்தியும் செல்லும் தன்மையை சரிபார்த்தும் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான்.

19. சா.சா.ஆ.1 கிரைய ஆவணம் எழுதி நிறைவேற்றப்பட்டது (Execution) என்றால் சரிதான்.

20. சா.சா.ஆ.1 பதிவு நடைமுறை விதிகளின் படி கிரையம் வாங்குபவர், கிரையம் கொடுப்பவர் ஆகியோர்களின் புகைப்படத்தை எங்கள் அலுவலகத்தில் உள்ள கேமராவில் பதிவு செய்தும், எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பயோமெட்ரிக் மூலம் ரேகை பதிவு செய்தும், கட்டணங்கள் பெறப்பட்டு அனைத்து நடைமுறைகளும் முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

21. சா.சா.ஆ.6 ஆவணத்திற்கு எங்கள் அலுவலகத்தில் தகவல் அளிக்கவில்லை என்றால் சரிதான். எனவே அருணாச்சலம் மாவட்ட

பதிவாளரிடம் தகவல் முதல் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

22. முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு மாவட்ட பதிவாளர் என்ன உத்தரவு பிறப்பித்தார் என்றால் உடனடியாக பதில் கொடுக்கமாறு உத்தரவிட்டிருந்தார். ஆனால் நாங்கள் சா.சா.ஆ.1ன் அசலை 4ம் வாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

23. எனவே அருணாச்சலம் மாநில தகவல் ஆணையத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்திருக்கிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

24. என் அலுவலகத்தில் அருணாச்சலம் கொடுத்த தகவல் உரிமை கீழான மனுவிற்கு ஒரு கோப்பு தனியாக பராமரிக்கப்பட்டு முதல் மேல்முறையீட்டு மனு அதன் பேரில் மாவட்ட பதிவாளர் வழங்கிய உத்தரவு, 2ம் மேல்முறையீட்டுவின் விவரங்கள் துலங்கும் என்றும் நான் வேண்டுமென்றே அதனை ஆஜர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

25. 23.04.2019 தேதியில் 4ம் வாதிக்கு எதிராக ராஜ் என்ற சண்முகராஜ் சட்டத்திற்கு முரணான ஆவணங்களை தங்களிடம் பதிவு செய்ய ஏற்பாடு செய்து வருவதாகவும் எனவே மேற்படி ஆவணங்களை பதிவு செய்யக்கூடாது என மாவட்ட பதிவாளருக்கு ஓர் விண்ணப்பம் அளித்திருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

26. 23.04.2019ம் தேதி விண்ணப்பத்திற்கு முரணாக ராஜ் என்ற சண்முகராஜ் முன்னிட்ட ஆவண எண்.1528/2019 பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

27. சா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சந்திரா பெயருக்கு ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய நான் வட்டாட்சியருக்கு பரிந்துரை கடிதம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல சா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்களை பொறுத்து பட்டா ரத்து செய்யக்கோரி வட்டாட்சியர் விசாரணையில் உள்ள மனுவின் தற்போதைய விவரம் கேட்டு பரிந்துரை கடிதம் அனுப்பினேன். நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பட்டாவை ரத்து செய்யவே கடிதம் அனுப்பினேன் என்றால் சரியல்ல.

28. சா.சா.ஆ.1ல் இணைத்துள்ள நீதிமன்ற தீர்ப்புகளை படித்து பார்த்து உரிமையாளரை முடிவு செய்தேன் என்றால் சரிதான்.

29. சா.சா.ஆ.1 என்ன காரணத்திற்காக நிலுவையில் உள்ளது என்பதற்காக சா.சா.ஆ.1ல் கிரையம் கொடுத்தவருக்கோ, கிரையம் வாங்கியவருக்கோ தகவல் அனுப்பப்பட்டதா என்றால் எழுத்து மூலமாக கூறவில்லை வாய்மொழியாக கூறினேன். நான் இந்த விவரத்தை என்பொறுப்பில் இருந்து கழிப்பதற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி